தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

வெள்ளிக்கிழமை, 1984 மார்ச் 9.

(மாசி 26, ருத்ரோத்காரி, திருவள்ளுவராண்டு-2015.)

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Increments for Lecturers.

* 75. *Q.*—Thiru K. ARUNACHALAM (on behalf of Thiru P. R. Thomas): Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether it is a fact that increments for Lecturers in Government Colleges, who possess Second Class Master's Degree, were stopped after five increments, as per G.O. Ms. No. 2107, Education, dated 21st September 1977;

(*b*) if so, whether it is also a fact that this order was amended by the Government, on representation by the Director of Collegiate Education and is applied to existing staff serving in Arts and Science Colleges; and

(*c*) if so, whether there is any proposal to extend the amended order to Aided Engineering College staff also?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) ஆம். அரசின் பரிசீலனையில் உள்ளது.

புள்ளமங்கலம் அரசினர் உயர்நிலைப்பள்ளி

* 76 வினா.—திரு. க. அருணாசலம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், நாகப்பட்டிணம் கல்வி மாவட்டத்தில் 1977 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட புள்ளமங்கலம் அரசினர் உயர்நிலைப்

பள்ளிக் கட்டிடத்திற்கென, மன்னார்குடி ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து ரூ. 22,500 செலுத்தப்பட்டிருந்தும், இதுவரை அக்கட்டிடம் கட்டப்படவில்லை என்பதனை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

(உ) அக்கட்டிடம் எப்போது கட்டி முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம். (அ), (இ) மற்றும் (உ): இப்பள்ளிக்குக் கட்டிடம் கட்டுவதற்கென பெறப்பட்ட மக்களின் பங்குத் தொகை ரூ. 12,500 ஆகும். மன்னார்குடி ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து பெறப்பட்ட தொகையான ரூ. 10,000 இப்பள்ளி ஆரம்பிப்பதற்கென்று கொடுக்கப்பட்ட தொகையாகும். இவ்வூராட்சி ஒன்றியக் கட்டடத்தையும் இவ்வூராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான 2.40 ஏக்கர் நிலத்தையும் இப்பள்ளிக்கென பெறுவது குறித்து நாகை மாவட்டப் பதிவாளர் மற்றும் பதிவுத்துறைத் தலைமை ஆய்வாளர் ஆகியோருக்கிடையே கடிதப்போக்கு வரத்து நடந்துவருகிறது. இம்மாற்றம் செய்யப்பட்ட பின்பே இப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடங்கள் கட்டுவது குறித்து பரிசிலனை செய்ய இயலும்.

மதுரையில் தமிழ்ச் சங்கம்

***77 வினா.—திரு. ஆ. நல்லசிவன் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் சார்பில்):** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரையில் தமிழ்ச் சங்கம் ஒன்று அமைப்பதென அரசு முடிவு செய்துள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்

(இ) இச்சங்கத்தின் அமைப்பு, செயல்முறை, நடைமுறை வழிகள் ஆகியவற்றை வகுத்துத் தர ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு தன் அறிக்கையை விரைவில் அரசுக்கு அளிக்கும், இச்சங்கத்தின் கட்டிடங்கள் கட்ட மதுரையில் வேண்டிய நிலத்தை ஒதுக்கீடு செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

திரு. ஆ. நல்லசிவன்: தமிழ்ச் சங்கம் அமைப்பதனுடைய நோக்கம் பற்றியும், உறுப்பினர்களாக வருவதற்கு என்ன தகுதி இருக்க வேண்டும் என்பது பற்றியும், அதை அரசு என்ன நோக்கத்தோடு ஆரம்பித்திருக்கிறது என்பது பற்றியும் அறிய விரும்புகிறேன்.